DEPOSITION OF WITNESS
(Chapter XXII (Code of CRIMINAL Procedure)
THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

Calender

Miscellaneous Case No. C.C.201/2019

Preliminary Register P.W. 1

Sessions

Deposition of Witness for Prosecution / Defence / Court

Name : Vishnu

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.04.2022.

<u>முதல் விசாரணை</u> -

நான் மூலச்சலில் வசிக்கிறேன். உடற்பயிற்ச்சி கூடம் வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். 3 ம் எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை 3 ம் எதிரியை தெரியும்.) எனது ஜிம்முக்கு வரும் ஆட்களிடம் என்னை குறித்து பேசியது சம்பந்தமாக எனக்கும் 1 ம் எதிரிக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்தது. ஞாயிற்றுகிழமைகளில் எனது நண்பர்கள் வீட்டுக்கு வருவது வழக்கம். 04.09.2016 ம்

தேதி இரவு 9.30 மணிக்கு நான் எனது வீட்டிற்கு வெளியெ எனது நண்பர்கள் அர்சாத், சுதின், பிரதீப் மற்றும் சரணவன் ஆகியோர் பேசிக்கொண்டிருக்கும்போது எதிரிகள் டார்வின், ராஜேஸ், ஜெயசிங் மற்றும் றிச்சர்ட் என்பவர் எனது வீட்டுக்கு வெளியே வந்து புண்டாமோனே, தேவடியாமகனே என்று கெட்டவார்த்தைகள் பேசினார்கள் நான் உடனே வெளியே வந்து பார்த்தேன். டார்வின் மற்றும் ராஜேஸ் கையில் வெட்டுகத்தி வைத்திருந்தாகள். டார்வின் எனது வயிற்றின் இடது பக்கம் வெட்டு கத்தியால் வெட்டிவிட்டார். அடுத்தவெட்டை தடுக்கும்போது எனது இடது கையில் சுண்டுவிரலில் வெட்டுகாயம் ஏற்பட்டது. ராஜேஸ் தனது கையில் இருந்த வெட்டுகத்தியால் இடது முழங்கையில் வெட்டினார். றிச்சர்ட் முதுகில் கையால் குத்தினார். ஜெயசிங்கிடம் வெட்டுகத்தி இருந்தது. கையால் எனது இடுப்பில் குத்தினான். அர்சாத்தையும் றிச்சர்ட் அடித்தார். ஜெயசிங் சுஜினை இடது தலையில் வெட்டி அவரது கண்ணில் வீக்கம் ஏற்பட்டது. ஆட்டோ பிடித்து தக்கலை அரசு மருத்துவமனைக்கு வந்து அங்கிருந்து ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு வந்த போலீசாரிடம் புகார் மனு அளித்தேன். புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். சுமார் ஒரு மாதம் உள்நோயாளியாக சிகிட்சை பெற்றேன். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

தக்கலை அரசு மருத்துவமனையில் இருந்து ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு சம்பவம் நடந்த அன்றே சென்றோம். போலீசார் இரவு 9.30 மணி அளவில் ஆசாரிபள்ளம் வந்து புகார்மனு பெற்றார்கள். அதன் பின் எந்த தேதியில் போலீசார் விசாரித்தார்கள் என்றால் போலீசார் விசாரிக்கவில்லை. போலீஸ் விசாரணையில் 1 ம் எதிரியின் தம்பி காட்வினும் றிச்சர்ட் மற்றும் பால்டேனியல் ஆகியோர் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும் முன்னர் தவறுதலாக குறிப்பிட்டதாக சொல்லவில்லை அவர்கள் சம்பவத்தில் உண்டு. எனது வீடு மூலச்சல் சுனப்பாறையில் உள்ளது. சம்பவம்நடந்ததாக சொல்லும் இடம் கிறிஸ்துநகரில் உள்ளது என்றால் சரிதான். சுனப்பாறையில் உள்ள கிறிஸ்துநகரில் உள்ளது. சுனப்பாறைவிளையும் கிறிஸ்துநகரும் வேறு வேறு ஊர்கள் என்றால் சரியல்ல. கிறிஸ்துநகர் ஆற்றுப்பாலத்தில் சம்பவம் நடைபெறவில்லை அதற்கு கொஞ்சம் கீழே நடந்தது. எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 அடி இருக்கும். கிறிஸ்துநகர் ஆற்றுப்பாலத்தில் இருந்து எனது வீடு 80 மீட்டருக்குள் இருக்கும். சம்பவம் எனது வீட்டுக்கு முன்பு நடந்ததா என்றால் ஆமாம். எனக்கு

ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் வெட்டுக்காயங்கள். ஓங்கி வெட்டினார்களா என்றால் ஆமாம் ஓங்கி வெட்டினார்கள். தறையில் மற்றும் எனது சட்டையில் இரத்தம் படிந்தது. இரத்தம்பட்ட சட்டையை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது காயங்களை மருத்துவரிடம் காண்பித்து கொடுத்தேன். மருத்துவரிடம் சம்பவம் 9.30 மணிக்கு நடைபெற்றதாக சொன்னேன். சம்பவ இடத்தின் அருகே உள்ள வீடுகளில் உள்ள ஆட்கள் பெயர் தெரியாது. அருகில் உள்ளவர்கள் ஓடி வந்தார்களா என்றால் ஆமாம் சுமார் 50 பேர் வரை கூடினார்கள். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII (Code of CRIMINAL Procedure)
THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

Calender

Miscellaneous — Case No. C.C.201/2019

Preliminary Register — P.W. 2

Sessions

Deposition of Witness for: Prosecution / Defence / Court

Name : Arsath

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.04.2022.

முதல் விசாரணை -

நான் தக்கலையில் வசிக்கிறேன். தண்ணீர் கேன் சப்ளை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 3 ம் எதிரியை தெரியும். (1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் 3 ம் எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை) 04.09.2016 ம் தேதி நாங்கள் அ.சா.1 வீட்டிற்கு சென்றோம். அப்போது சுமார் 9.00 மணி அளவில் டார்வின், ராஜேஸ், ரிச்சர்ட் மற்றும் ஜெயசிங் ஆகியோர் அ.சா.1 வீட்டின் முன்பு வந்து புண்டாமோனே என்று கெட்டவார்த்தை பேசி டார்வின் அரிவாள்

எடுத்து அ.சா.1 ன் வயிற்றின் இடது பக்கம் வெட்டினார். தடுக்கபோனபோது இடது கையில் சுண்டுவிரலில் காயம் ஏற்பட்டது. ராஜேஸ் அரிவாள் எடுத்து எனது இடது முழங்கையில் வெட்டினான். ஜெயசிங் அரிவாளால் சுஜினை வெட்ட வரும்போது இடறி கண்புருவத்தின் அருகே காயம் ஏற்பட்டது. முதலில் தக்கலை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். தக்கலை அரசு மருத்துவமனையில் போலீசார் வந்து விசாரித்தார்கள். நான் 20 நாட்கள் உள்நோயாளியாக சிகிட்சை பெற்றேன். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

முதல் விசாரணையில் சொல்லியதுபோல்தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். வீட்டுக்குள்ளிருந்து பேசிக்கொண்டிருந்தோமா என்றால் இல்லை. வராண்டாவில் இருந்து பேசிக்கொண்டிருந்தோம். எதிரிகள் வீட்டு வாசலில் வைத்து தாக்கினார்கள். போலீசார் சம்பவம் நடந்த அன்றே விசாரித்தார்கள். அதன் பின்பு விசாரிக்கவில்லை. நான் சொன்ன தேதியில் இடத்தில் விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII (Code of CRIMINAL Procedure)
THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

Calender

Miscellaneous Case No. C.C.201/2019

Preliminary Register P.W. 3

Sessions

Prosecution

Deposition of Witness for Defence

Court

Name : Subin

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.04.2022.

**முதல் விசாரணை** -

நான் தக்கலையில் வசிக்கிறேன். கொத்தனார் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஜெயசிங்கை தெரியும். (1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் 3 ம் எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை). 04.09.2016 ம் தேதி இரவு 9.00 மணி அளவில் விஸ்ணு வீட்டுக்கு பக்கத்தில் டார்வின் வெட்டுகத்தியை வைத்து அ.சா.1 ஐ வயிற்றில் வெட்டினார் பின்பு வெட்டும்போது தடுத்ததில் இடது கையில் காயம் ஏற்பட்டது. ராஜேஸ் வெட்டுகத்தியை வைத்து அர்சாத்

முழங்கையில் வெட்டினார். றிச்சர்ட் கையால் குறுக்கில் அடித்தார். ஜெயசிங் வெட்டுகத்தியை வைத்து எனது இடது தலையில் வெட்டினார் எனது இடது கண்ணில் இரத்தம் கட்டியது. தலையில் ஸ்கேன் எடுத்து பார்த்தபோது இரத்தம் உறைந்து இருப்பதாக சொன்னார்கள். தக்கலை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். போலீசார் தக்கலை அரசு மருத்துவமனைக்கு வந்து விசாரித்தார்கள். அன்று இரவே நானும் விஸ்ணுவும் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அர்சாத் தக்கலை அரசு மருத்துவமனையில் இருந்தார். நான் 15 நாட்கள் சிகிட்சை பெற்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

போலீசார் சம்பவம் நடந்த அன்று விசாரித்தார்கள். தக்கலையில் இருந்து ஆசாரிபள்ளம் செல்வதற்காக ஆம்புலன்சில் இருந்தபோது விசாரித்தார்கள். 9.30 மணி அளவில் கிளம்ப தயாராக இருந்தபோது விசாரித்தார்கள். அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இரவு 5 பேர் வீட்டில் கூடி பேசிக்கொண்டிருந்தோம். சம்பவம் வீட்டு முற்றத்தில் நடந்ததா என்றால் இல்லை அவர் வீட்டின் முன்பு சுமார் 80 அடி தூரத்தில் நடந்தது. எப்படி மருத்துவமனைக்கு சென்றேன் என்று ஞாபகமில்லை. மருத்துவமனைக்கு சென்ற பின்பு நினைவு வந்தது. நான் சொன்ன தேதியில் விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.